


07.10. 2024

தலைப்புச் செய்திகள்

- இந்தியா மாலத்தீவு நாடுகளுக்கிடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- நக்சல் பாதித்த பகுதி இளைஞர்கள் வன்முறை போக்கை கைவிட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அழைப்பு விடுத்துள்ளார்.
- சென்னை வான்சாகச நிகழ்வில் 5 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு உரிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததே காரணம் என்று மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
- 4. சென்னையில் 56 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட காவலர் துறை கட்டிடங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின இன்று திறந்துவைத்தார்.
- கன்னியாகுமரி திருநெல்வேலி, தென்காசி மாவட்ட மலை பகுதிகளில் இன்று கன மிக கன மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

இந்தியா மாலத்தீவு நாடுகளுக்கிடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ஹைதராபாத் இல்லத்தில் மாலத்தீவு அதிபர் மொகமது முயூஸுடன் இன்று நடத்திய இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் இந்திய உதவியுடன் மாலத்தீவில் மேற்கொள்ளப்பட்ட 700 சமூக வீட்டு வசதி திட்டங்களும் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையே மின்னணு இணைப்பு பரிவர்த்தனைகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், இதன்படி ரூபே பண பரிவர்த்தனை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விரைவில் UPI பண பரிவர்த்தனை அங்கு தொடங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

பெங்களூருவில் மாலத்தீவு நாட்டின் புதிய துணை தூதரகம் தொடங்கப்படும் என்றும் மாலத்தீவில் உள்ள தேசிய ராணுவ படைக்கு இந்தியா உரிய பயிற்சிகளை வழங்கும் என்றும் கூறினார்.

முன்னதாக மாலத்தீவு அதிபர் டாக்டர் முகமது முய்ஸு-விற்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

***********

அமித்ஷா

நக்சல் பாதித்த பகுதிகளில் உள்ள இளைஞர்கள் வன்முறை போக்கை கைவிட்டு இயல்பான வாழ்க்கை பாதைக்கு திரும்ப மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அழைப்பு விடுத்துள்ளார்.

புதுதில்லியில் நக்சல் தீவிரவாதம் பாதித்த மாநில முதலமைச்சர்களுடன் இன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் பேசிய அவர் கடந்த 10 ஆண்டுகளில் இப்பகுதிகளின் வளர்ச்சிக்காக 3 ஆயிரத்து 6 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக கூறினார்.

சிறப்பு மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 590 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

544 மேம்பட்ட காவல் நிலையங்கள் கட்டப்பட்டதாகவும்,

11 ஆயிரத்து 500 கிலோ மீட்டர் நீள சாலைகள் போடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

15 ஆயிரத்து 300 செல்.ஃபோன் கோபுரங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கோபுரங்களுக்கு 4ஜி அலைக்கற்றை இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆந்திரம், பீகார், சட்டிஸ்கட், ஜார்கண்ட், தெலங்கானா, ஒடிசா, மஹாராஷ்டிரா, மத்திய பிரதேச மாநில முதலமைச்சர்கள் பங்கேற்றனர்.

***********

சிராக் பாஸ்வான்

உலகளாவிய உணவு கூடமாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை தொழில்துறையினர் கண்டறிய வேண்டும் என மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பின் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், உணவு பொருட்களில் இந்தியா நிர்ணயிக்கும் தரம் சர்வதேச தரமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

***********

எல்.முருகன்

சென்னையில் நடைபெற்ற விமான வான்சாகச நிகழ்ச்சியில் 5 பேர் உயிரிழந்த சம்பவம் மிகவும் வருந்ததக்கது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக அரசிடம் விமானத்துறை அதிகாரிகள் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் அதற்கேற்றார்போல அரசு நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

போதை பொருள் கடத்தல் விவகாரங்களில் சம்மந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

***********

எடப்பாடி

சென்னை வான்சாகச நிகழ்ச்சியின்போது நேரிட்ட உயிரிழப்பு சம்பவத்திற்கு முதலமைச்சர் முழு பொறுப்பேற்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேவையான பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளாததே இதற்கு காரணம் என்று குறை கூறியுள்ளார்.

அஇஅதிமுக ஆட்சியின்போது தமிழ்நாட்டில் போதை பொருள் புழக்கம் கட்டுக்குள் இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

அஇஅதிமுக ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட தலைவாசல் கால்நடை பூங்கா திட்டத்தை அரசு முடக்க பார்ப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

************

மா.சுப்பிரமணியன்

சென்னையில் வான் சாகச நிகழ்ச்சியின் போது 5 பேர் உயிரிழந்த சம்பவம் வெயிலின் தாக்கத்தால் ஏற்பட்டதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வான் சாகச இந்நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளை அவர் எடுத்துரைத்தார்.

அவசர நிலையை சமாளிக்க 40 ஆம்புலனஸ் வாகனங்கள் மற்றும் துணை மருத்துவ குழுக்கள் தயார்நிலையில் இருந்ததாக சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியின்போது 5 பேர் உயிரிழந்தது துரதஷ்டவசமானது என்று கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்டு ஓமாந்தூரார் அரசு மருத்துவமனையில் புறநோயாளிகளாக சிகிச்சை பெற்ற அனைவரும் நலமுடன் வீடு திரும்பியிருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

***********

தேர்தல்

ஜம்மு காஷ்மீர் மற்றும் ஹரியானா சட்டப்பேரவை தேர்தல்களில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

வாக்கு எண்ணிக்கையை ஒட்டி ஜம்மு காஷ்மீரில் 20 மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற்ற தேர்தலில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

ஹரியானாவில் 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்ற நிலையில் 22 மாவட்டங்களிலும் வாக்கு எண்ணும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று மாநில தேர்தல் அலுவலர் திரு.பங்கஜ் அகர்வால் தெரிவித்துள்ளார்.

***********

ஆளுநர்

ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை கூட்டம் மும்பையில் இன்று நடைபெறுகிறது.

வங்கி ஆளுநர் திரு.சக்தி காந்ததாஸ் தலைமையில் நடைபெறும் இந்த மூன்று நாள் கூட்டத்தில் வங்கி வட்டி விகிதங்களில் மாற்றம் இல்லாமல் தொடர்வதற்கான முடிவு எட்டப்படும் என தெரிகிறது.

பணவீக்க விகிதம், பொருளாதார வளர்ச்சி ஆகியவை குறித்து ரிசர்வ் வங்கி விரிவான ஆலோசனைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த 3 நாள் கூட்டத்தில் எட்டப்படும் முடிவுகளை வரும் புதன்கிழமை வங்கி ஆளுநர் திரு.சக்தி காந்த தாஸ் அறிவிப்பார்.

***********

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் 56 கோடியே 27 லட்சம் செலவில் கட்டப்பட்ட காவலர் துறை கட்டிடங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பில் 18 கோடியே 78 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களையும் அவர் திறந்துவைத்தார்.

தேனி மாவட்டம் போடி நாயக்கனூரில் 2 கோடியே 12 லட்சத்து 34 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 10 குடியிருப்புகள்,

சென்னை, மதுரை, நாமக்கல், தஞ்சை உள்ளிட்ட இடங்களில் கட்டப்பட்ட 7 தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

தடய அறிவியல் துறை சார்பில் தஞ்சாவூரில் 3 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மரபணு ஆய்வக பிரிவு கட்டிடத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.

சென்னையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவையும் முதலமைச்சர் இன்று திறந்து வைக்கிறார்.

***********

பருத்தி தினம்

சர்வதேச பருத்தி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தை சார்ந்த பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் சோமசுந்தரம் இத்தினத்தின் முக்கியத்துவம் குறித்து தெரிவிக்கையில்:

வாய்ஸ்

நலம் தரும் பருத்தி என்ற கருப்பொருளுடன் இந்தாண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

***********

சேலம் வாய்ஸ்

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் சேலம் மாவட்டத்தை சேர்ந்த ஆராய்ச்சி மாணவர்கள் அதிகளவில் ஈடுபட்டு வருவதாக பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு. ஜெகந்நாதன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

***********

இருவரி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே விரிவாக்க பணிகள் நடைபெறும் என்பதால் சாலை மறியல்,

ஆர்பாட்டங்களை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் அறிவுறுத்தியுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் படைவீரர் குடும்பத்தினர் சிறப்பு குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் இன்றுமாலை 4 மணிக்கு நடைபெறுகிறது.

பெரம்பலூர் மாவட்ட மின்வாரிய அலுவலகத்தில் மின் நுகர்வோர் குறைதீர் கூட்டம் நாளை நடைபெற உள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் திருபுவனம் அருகே காரில் கடத்தப்பட்ட ஆயிரத்து 80 கிலோ ரேசன் அரிசியை மாவட்ட குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு பிரிவினர் பறிமுதல் செய்துள்ளனர்.

திருச்சி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

நாகை மாவட்டத்தில் சமூக நலத்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணி இன்று நடைபெற்றது.

***********

வரையாடு

தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாடு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

தேவாங்கு

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் அருகே அரியவகை தேவாங்கை அங்குள்ள இளைஞர்கள் மீட்டு வனத்துறையிடம் ஒப்படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டத்தில் பழங்குடியினருக்கு ஜன்மன் திட்டத்தின் கீழ் இலவச வீட்டு மனை பட்டாக்கள் இன்று வழங்கப்பட்டது.

முன்னதாக இங்கு செயல்படுத்தப்படும் அரசு திட்டங்கள் குறித்து போக்குவரத்து துறை முதன்மை செயலாளர் திரு. சுன் சோங் கம் ஜடக் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

************

ஒகேனக்கல்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 13ஆயிரம் கன அடியாக குறைந்ததை அடுத்து சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிப்பதற்கும் பரிசல் பயணம் மேற்கொள்ளவும் தர்மபுரி மாவட்ட நிர்வாகம் இன்று அனுமதி அளித்துள்ளது.

************

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கன்னியாகுமரி திருநெல்வேலி, தென்காசி மாவட்ட மலை பகுதிகளில் இன்று கன மிக கன மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தேனி திண்டுக்கல் மதுரை புதுக்கோட்டை தஞ்சை திருவாரூர் நாகை மயிலாடுதுறை கடலூர் மாவட்டங்களில் கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

************

டென்னிஸ்

ஷாங்காய் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரோஹன் போப்பண்ணா, குரேஷியாவின் இவான் டாடிக் இணை – நெதர்லாந்து, குரேசிய இணையை நாளை எதிர்கொள்கிறது.

************

கிரிக்கெட்

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி புதுதில்லியில் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

3 ஆவது இறுதி 20-20 போட்டி ஹைதராபாத்தில் வரும் 12ஆம் தேதி நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

************